## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் விரிவுப்பெயரைத்திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான விரிவுப்பெயரின் சட்டப் பயனானது, "இலங்கைக் காப்புறுதிச் சபை" என்ற பெயரை, "இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என மாற்றுவதுமாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான சட்டப்பயனானது, "இலங்கைக் காப்புறுதிச் சபை" என்னும் பெயரை, "இலங்கைக் காப்புறுதி ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழு" என மாற்றுவதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்ப துடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பொதுக்காப்புறுதித் தொழில் அல்லது நீண்டகாலக் காப்புறுதித் தொழிலொன்றின் பதிவுக்கான தகைமைகளை குறித்துரைப்பதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆ, 15இ மற்றும் 15ஈ என்னும் பிரிவு களை உட்புகுத்துகின்றதென்பதுடன், உட்புகுத்தப்பட்டவாறான சட்டப்பயனானது-

(1) குறித்தசில கம்பெனிகள்;

(2) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்;

(3) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

என்பவற்றை 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத்தொகுதி பரிவர்த்தனை யொன்றின் மீது நிரலிடப்படுவதிலிருந்து விலக்களிப்பதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, எவரேனும் காப்புறுதி முகவர், ஒரு பொதுக் காப்புறுதித் தொழிலுக்காகவும் ஒரு நீண்டகாலக் காப்புறுதித் தொழிலுக்காகவும் பணியாற்றுவதனை அனுமதிப்பதுமாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 114 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்ப துடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்திற்கு, "காப்புறுதித் தொழிலின் வகுப்பு", "வெளிநாட்டுக் கொளிக்கம்பெனி", மற்றும் "உள்நாட்டுத் துணை நிலைக் காப்புறுதிக் கம்பெனி" என்பவற்றின் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதுமாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம், 3 ஆவது வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான விளை வாந்தன்மையினதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், 3 ஆவது வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான விளை வாந்தன்மையினதாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், உளதாம் காப்புறுதியாளர்களுக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்புடைமையை நீடிப்பதாகும்.

